முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் உள்ளிட்டோர் உள்ளனர்.

நல்ல பணிகள் ஆற்றிட....

சுடு நெருப்பில்
புடம் போடத்தான்
நல்ல தங்கம் கிடைக்கும்.
அதுபோல் பொது வாழ்க்கையில்
இடையூறுகளுக்கு
ஈடு கொடுத்தால் தான்
தனது நாட்டிற்கும்
தாய் மொழிக்கும்
நல்ல பணிகள்
ஆற்றிட முடியும்.

.... கலைஞர் .....

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் 06.06.2023 அன்று திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.06.2023) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நகர்ப்புற நலவாழ்வு மையங்களை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, துணை மேயர் மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், மண்டலக்குழுத் தலைவர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, ஆர்.துரைராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா! பட்டிமன்றம் - விளையாட்டு போட்டி- மருத்துவ முகாம் - கருத்தரங்கம்!

சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் தொடர் நிகழ்ச்சிகள்!

மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா அறிக்கை!

சென்னை, ஜூன் 9-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முதற்கட்டமாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா தொடர் நிகழ்ச்சிகள், பட்டிமன்றம் - விளையாட்டு போட்டி - மருத்துவ முகாம் - கருத்தரங்கம் - பொதுக்கூட்டம் - தெருமுனை கூட்டங்கள் நடைபெறுகின்றன. இக் கூட்டங்களில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தயாநிதி மாறன் எம்.பி., கோ.வி. செழியன் எம்.எல்.ஏ., மருத்துவர். எழிலன் எம்.எல்.ஏ., தமிழன் பிரசன்னா பங்கேற்று பேசுகின்றனர் என்று மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவின் முதற்கட்ட நிகழ்ச்சிகளாக மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் எடுத்த முடிவின்படி கீழ் கண்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

24.06.23 - பங்கேற்போர் தயாநிதி மாறன், நிகழ்ச்சி - மின்னொளி கிரிக்கெட்

போட்டி - தலைமை: க. கோவிந்தசாமி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர்.

15.06.2023 - அத்திப்பட்டு சாம்ராஜ் தெருமுனை கூட்டம், நலத்திட்டம், 49-வது வட்டம். தலைமை எல். சீனிவாசன் .

19.06.23 - பங்கேற்பு தமிழ்அமுதன், தெரு முனை கூட்டம், நலத்திட்டம்.

51-வது வட்டம். தலைமை ஆறுமுகம் (வட்டச் செயலாளர்).

22.06.23 ஆலங்குடி செல்வராஜ், தெருமுனை கூட்டம், நலத்திட்டம், 50 அ வட்டம், தலைமை என். கிருஷ்ணன் (வட்டச் செயலாளர்) இராயபுரம் மேற்கு.

10.06.23 முனைவர். கோவி.செழியன் பட்டிமன்றம் 52 அ வட்டம் தலைமை கொரியர் பி முருகன் (வட்டச் செயலாளர்)

27.06.23 ஒப்பில்லாமணி தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் 48-வது வட்டம் தலைமை இரா. பாலன் ஆர்.கே.நகர் கிழக்கு.

13.06.22 சைதை சாதிக் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் 43 வது வட்டம் தலைமை வீ. வடிவேல் வட்டச் செயலாளர் .

18.06.23 மருத்துவர். எழிலன் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் 40 வது வட்டம் நா.கோதண்டன் வட்டச் செயலாளர்.

28.06.23 ஒப்பில்லாமணி தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் 42 அ வட்டம் தலைமை தமிழ்ச்செல்வன் வட்டச் செயலாளர் ஆர்.கே.நகர் மேற்கு.

11.06.23 சரத் பாலா தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் 38 வது வட்டம் டி.சங்கர் பகுதி இளைஞரணி அமைப்பாளர்.

20.06.23 தமிழ் அமுதன் தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் 41 அ வட்டம் ஆர்.எ.எம்.சசிகுமார் (வட்டச் செயலாளர்).

26.06.23 ஈரோடு இளைய கோபால் தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் 41வது வட்டம் தலைமை கி.தேவன் (வட்டச் செயலாளர்)

பெரம்பூர் வடக்கு 16.06.23 தமிழன் பிரசன்னா அத்திப்பட்டு சாம்ராஜ் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் அரிதாஸ் 35-வது வட்ட செயலாளர்.

23.06.23 கவிஞர் நந்தலாலா பட்டிமன்றம் கார்த்திபன் 34 அ வட்டச் செயலாளர்.

25.06.23 ஈரோடு இளைய கோபால் தெருமுனை கூட்டம் மற்றும் நலத்திட்டம் சி.எஸ்.ரவி (37 அ வட்ட செயலாளர்).

பெரம்பூர் தெற்கு 12.06.23 சரத் பாலா பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்டம் மாரிமுத்து (45வது வட்ட செயலாளர்).

15.06.23 சைதை சாதிக் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்டம் தினகரன் (45 அ வட்ட செயலாளர்).

மேற்கொண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் இந்து சமய அறநிலைத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிகுழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே. ஜே.எபினேசர், ஐட்ரீம் இரா.மூர்த்தி, தொகுதி பொறுப்பாளர்கள் என். நவீன், நந்தனம் நம்பிராஜன், வழக்கறிஞர் எ.சரவணன், மாநில நிர்வாகிகள் இரா மதிவாணன், பி.டி.பாண்டி செல்வம், இரா நரேந்திரன், சிம்லா முத்துச்சோழன். தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ந.மனோகரன், இரா.கருணாநிதி, பொதுக் குழு உறுப்பினர்கள் நா.சண்முகம், எல்.அருளரசன், வே.சிவக்குமார், கே.அமுலு, பா.மதிவாணன், டி.கமலக்கண்ணன், கி.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகிகள் ஆர்.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, வி.தயாளன், பகுதி செயலாளர் க.ஜெயராமன், அ.முருகன், வ.பெ. சுரேஷ், இரா செந்தில்குமார், எஸ். ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்வார்கள்.

நாகை நீலாயதாட்சியம்மன்

திருக்கோயிலின் ரூ.38 கோடி சொத்து மீட்பு!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆலோசனைப்படி நடவடிக்கை!

சென்னை, ஜூன் 9-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின் படியும் இந்து சமய அறநிலையத்துறையின்பகட்டுப் பாட்டிலுள்ளததிருக்கோயில்களுக்குச்சொந்தமானசொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. அதன்படி நேற்று (08.06.2023) நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் அருள்மிகு காயாரோகண சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.38 கோடி மதிப்பீட்டிலான இடம் மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் அருள்மிகு காயாரோகண சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான 1,63,773 சதுரடி பரப்பிலான காலி மனை தனியார் பள்ளி ஒன்றிற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது. இப்பள்ளி நிர்வாகம் நீண்ட காலமாக வாடகை செலுத்தாமல் நிலுவை வைத்திருந்ததால் சட்டப்பிரிவு 78ன்படி நாகப்பட்டினம் இணை ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, நாகப்பட்டினம் மாவட்ட உதவி ஆணையர் திருமதி ப. ராணி அவர்கள் முன்னிலையில் காவல்துறை மற்றும் வருவாய்துறை அலுவலர்களின் உதவியுடன் இன்று மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. மீட்கப்பட்ட சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூ.38 கோடியாகும்.

இந்நிகழ்வின்போது திருக்கோயில் செயல் அலுவலர் திருமதி மா.தனலட்சுமி, வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) பி.எம்.அமுதா, சிறப்பு பணி அலுவலர்கள், ஆய்வாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வளர்க்கப்படும்

செல்லப்பிராணிகளுக்கு இணைய வழி மூலம் உரிமம்!

மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 9-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளுக்கு இணையவழி (Online) மூலம் உரிமம் வழங்கும் திட்டத்தை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (08.06.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையின் கால்நடை மருத்துவப் பிரிவின் கீழ் 4 செல்ல பிராணிகள் சிகிச்சை மையங்கள், 5 நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்கள், 4 இறைச்சிக் கூடங்கள், 2 மாட்டுத் தொழுவங்கள் மற்றும் 1 தோல் நோய் பராமரிப்பு மையம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

இவற்றில் 4 செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சைகள் வழங்கப்படுவதோடு, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் இலவசமாக அளிக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது 4 செல்லப் பிராணிகளுக்கான சிகிச்சை மையங்களில் செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களிடமிருந்து ரூ.50/ பெறப்பட்டு, செல்லப் பிராணிகள் வளர்ப்பதற்குண்டான உரிமங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2022-23-ஆம் நிதியாண்டில் 27,295 செல்லப் பிராணிகளுக்கு இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு, 1,700 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 5 நாய் இனக்கட்டுப்பாட்டு மையங்களில் தெரு நாய்களுக்கு இனக்கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் போடப்பட்டு வருகிறது. கடந்த 2022-23ஆம் நிதியாண்டில் 20,385 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு, 15,755 தெருநாய்களுக்கு இனக்காட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

இந்நிலையில், செல்லப் பிராணிகள் மற்றும் அதன் உரிமையாளர்களின் நலன் கருதி செல்லப் பிராணிகளை சிகிச்சை மையங்களுக்கு அழைத்து வராமல் பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து, செல்லப் பிராணிகளுக்கு உரிமம் வழங்க தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து செல்லப் பிராணிகளுக்கும் ஆண்டுதோறும் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படுவது உறுதி செய்யப்படும். மேலும், வயது முதிர்ந்த மற்றும் நோய் வாய்ப்பட்ட செல்லப் பிராணிகளை தெருவில் விடுவதும் தடுக்கப்படும்.

மேலும், மாநகராட்சிக்குட்பட்ட நாய்கள் மற்றும் பூனைகள் ஆகியவைகளின் எண்ணிக்கை மண்டல வாரியாக கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வாய்ப்பை அனைத்து செல்லப் பிராணிகளின் உரிமையாளர்களும் பயன்படுத்திக் கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் கேட்கப்பட்டுள்ள விவரங்களை பதிவேற்றம் செய்து, ஆன்லைன் வாயிலாக ரூ.50/ செலுத்தி, தங்கள் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தை பதிவிறக்கம் செய்து கொண்டு பயனடையுமாறு மேயர் திருமதி ஆர்.பிரியா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் டாக்டர் சத்தியமூர்த்தி, கால்நடை சிகிச்சை துறை இயக்குநர் டாக்டர் குமரவேல், மாநகர நல அலுவலர் டாக்டர் எம்.ஜெகதீசன், கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் கமால் ஹுசைன், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள், கால்நடை உதவி மருத்துவர்கள், விலங்குகள் நல வாரிய உறுப்பினர்கள், தன்னார்வலர்கள் மற்றும் செல்லப் பிராணிகளின் உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மும்பையில்

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டுத் தொடக்க விழா!

நளினி சாரங்கன் சிறப்புரை!

மும்பை, ஜூன் 9-

முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா மும்பை புறநகர் குர்லா ஜெரிமெரி கிளை சார்பாக கழகப் பணிமனையான கலைஞர் மாளிகையில் கொண்டாடப்பட்டது..

புறநகர் திராவிட முன்னேற்றக் கழக துணைச்செயலாளர் அ.இளங்கோ தலைமையில் நடைபெற்ற விழாவில் ஜெரிமெரி கிளைக்கழகம் சார்பில் கோ.சீனிவாசகம் வரவேற்புரை ஆற்றினார். தி.மு.கழகத்தின் மகளிர் பிரச்சாரக் குழுச் செயலாளர் நளினி சாரங்கன் சிறப்புரை ஆற்றினார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்தை மும்பை புறநகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைச்செயலாளர் முனைவர் வதிலை பிரதாபன் திறந்து வைத்தார்.

மும்பை புறநகர் மாநிலத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் அலிசேக் மீரான், மும்பை புறநகர் தி.மு.க இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர் வ. ரா.தமிழ்நேசன், மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார், பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ.இரவிச்சந்திரன், இலக்கிய அணித் தலைவர் வே. சதானந்தன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பாவலர் நெல்லை பைந்தமிழ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள.

மும்பை புறநகர் தி.மு. கழகப் பொருளாளர் பி. கிருஷ்ணன், மும்பை மாநகரத் தி.மு.கழக அவைத்தலைவர் வே. ம. உத்தமன், தானே தி.மு.கழக கி.வீரமணி, டொம்பிவிலி கிளைக் கழக செயலாளர் வீரை சோ. பாபு, தானே தி.மு.க. செயலாளர் பாலமுருகன், எஸ்.பி.வண்டி, தி.மு.க. பொருளாளர் முஸ்தாக் அலி, ஆரே காலனி தி.மு.கழகம் தர்மலிங்கம், பொய்சர் மூர்த்தி, அம்பர்நாத் முத்தமிழ் தண்டபாணி, ஏ.சி.காதர், பஷீர், ஆரே காலனி சிவா, ஜெரிமெரி கிளை எஸ்.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இறுதியில் ஜெரிமெரி கிளைக்கழகத்தைச் சார்ந்த கே.ஜெகநாதன் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவு பெற்றது.

திருவொற்றியூர் மேற்கு பகுதியில்

கலைஞர் நூற்றாண்டு விழா - நல உதவிகள்!

பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன் வழங்கினார்!

திருவொற்றியூர், ஜூன் 9-

தமிழகத்தின் நவீன சிற்பி ஐயா கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் விதமாக கழகத் தலைவர் ஆணையேற்று மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம். எல்.ஏ. வழிகாட்டுதலின் பேரில் திருவொற்றியூர் மேற்கு பகுதியில் பகுதி கழக செயலாளர் வை.ம.அருள்தாசன் நல உதவிகள் வழங்கினார்.

ஐயா கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா திருவொற்றியூர் மேற்கு பகுதி எண்ணூர் அன்னை தெரசா ஆதரவற்றோர் இல்லத்தில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகத்தின் சார்பில் வட்டக் கழக செயலாளர் சிவகுமார் எம்.சி. முன்னிலையில் கழக செயல் வீரர் தழவை எஸ். ரஞ்சித் ஏற்பாட்டில் காலை உணவும் அதனைத் தொடர்ந்து ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள நபர்களுக்கு அத்தியாவசிய தேவைகளுக்கான உடைமைகள் உடைகளை பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் அருள்தாசன் வழங்கினார்.

தொடர்ந்து மதியம் மாவட்ட கழக பிரதிநிதி ஜி. தினேஷ் ஏற்பாட்டில் ஆதரவற்றோர் இல்லத்தில் வசிக்கிற அனைவருக்கும் மதிய உணவாக பிரியாணி வழங்கப்பட்டது . ஐயா கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து கழகத் தொண்டர்கள் வணங்கினார்கள்.

இந்த நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் ஆனந்தன், துணைச் செயலாளர் யு.எஸ். குறளரசன், மாவட்ட பிரதிநிதிகள் என்.ராம்குமார், ஜி.தினேஷ், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன், ராஜ்குமார், சக்கரவர்த்தி, பாபு, எஸ். ராஜேஷ், வெற்றி செல்வன் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் பங்கு பெற்றனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டப் பிரதிநிதி

தெ.ஜெயக்குமார் தாயார் சரோஜினி மறைவு!

ஆர்.எஸ்.பாரதி - என்.சந்திரன் அஞ்சலி!

சென்னை, ஜூன் 9-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக பிரதிநிதியும், முன்னாள் நகர்மன்ற உறுப்பினருமான தெ.ஜெயக்குமாரின் தாயார் சரோஜினி அவர்கள் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர் தெற்கு பகுதி மாவட்ட கழகப் பிரதிநிதியும், முன்னாள் நகர மன்ற உறுப்பினருமான தெ.ஜெயகுமாரின் தாயார் சரோஜினி, வயது 91 நேற்று காலை 8.00 மணியளவில் இயற்கை எய்தினார். அவரது உடல் ஆதம்பாக்கம் சுரேந்தர் நகர் 6-வது தெருவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

கழக அமைப்பு செயலாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான ஆர். எஸ்.பாரதி, 12-வது மண்டல குழு தலைவரும், ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளருமான என்.சந்திரன், வட்டக் கழக செயலாளர்கள் ஏ.வேலவன், ஜெ.நடராஜன், டி.ஜேசுதாஸ், கே.ஆர். ஜெகதீஸ்வரன், பகுதி துணை செயலாளர்கள் ஏ.சாலமன் எம்.சி., ர.பாபு, மாவட்ட பிரதிநிதிகள் கோ.பிரபாகரன், என்.பெருமாள், வீ.வெங்கட் ரமணன், பாபுகுமார், கிறிஸ்டோபர், கண்ணன், கோ.சுதாகரன், கு.விஜயன், கழக நிர்வாகிகள், முன்னோடிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

அவரது இறுதி ஊர்வலம் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு மாலை 5.00 மணியளவில் பழவந்தாங்கல் கண்ணன் காலனி இடுகாட்டில் தகனம் செய்யப்பட்டது.

கழக நிர்வாகிகள், உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி நகராட்சி அலுவலக எதிரில் தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி தலைமையில் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஏழை எளிய பொது மக்களுக்கு உணவு வழங்கினார். அருகில் நகர கழக செயலாளர் திருத்தணி வி.வினோத்குமார் உள்பட வட்டக் கழக செயலாளர் கழக நிர்வாகிகள் நகர் மன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத்தார் அதனை தொடர்ந்து திருவள்ளூர் நகரம் குளக்கரை தெருவில் அமைந்துள்ள நலவாழ்வு மையத்தினை திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடத்தில் கேட்டறிந்தார். சுகாதாரத்துறை துணை இயக்குனர் மருத்துவர் ஜவஹர்லால் நகரக் கழகச் செயலாளர் சி.ச.ரவிச்சந்திரன், நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகள், நகராட்சி அலுவலர்கள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.